செய்தி வெளியீடு எண்.89 நாள்.13.02.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் - தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு முகாம் 18.02.2017 அன்று நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

~~~~~

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் - தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ், திருவள்ளூர் மாவட்டத்தில் 2016-2017 ஆம் ஆண்டில் படித்து வேலையற்ற ஆண்/பெண் இருபாலருக்கும் வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் வேலைவாய்ப்பு முகாம் 18.02.2017 அன்று காலை 10.00 மணி முதல் அம்பத்தூர் பெருந்தலைவர் காமராசர் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது. அதில் பல்வேறு வகையான வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு அளிக்க உள்ளனர்.

இம்முகாமிற்கு குறைந்தபட்சம், 5ம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு (டிப்ளாமோ / ஐ.டி.ஐ) படித்த ஆண்/ பெண் இருபாலரும் கலந்து கொண்டு தங்கள் திறமைக்கு ஏற்ற நல்ல வேலைவாய்ப்பினை பெற்றிட இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. வயது, கல்வித் தகுதி முதலான உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட திட்ட மேலாளர், புதுவாழ்வு திட்டம். திருவள்ளூர் மாவட்டம் தொலைபேசி எண். 044 – 27665252 திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, திருவள்ளூர் மாவட்டம், தொலைபேசி எண் - 044- 27664528. 9445034210, 9445034211, 9445034212.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~